Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

06.04.2020 077 316 5555 திங்கட்கிழமை




## 8பேருக்கு இன்று சோதனை

யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 8பேரின் மாதிரிகள் கொரோனா தொற்றுச் சோதனைக்காக இன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பரிசோதனை முடிவுகள் இன்று இரவு வெளியாகும்.

2

# கொரோனா தொற்றாளர்கள் வெளியிலும் இருக்கலாம்!!!



### ஊரடங்கு நீடிக்கப்பட வேண்டும் என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தேவநேசன்

யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளுடன் தொடர்புடைய அனைவரையும் இனங்கண்டு தனிமைப்படுத்தியுள்ளோம் என்று சொல்ல முடியாது. அடையாளப்படுத்தப்படாதவர்களும் இருக்கலாம். எனவே ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட வேண்டும்.

2

## ஒரு நாளைக்கு 40 மாதிரிகள் சோதனை

யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கொரோனா தொற்றுக்குரிய சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு நாளைக்கு 40 மாதிரிகளே பரிசோதனை செய்யக் கூடியதாக இருக்கும் என்று, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஈ. தேவநேசன் தெரிவித்தார். (ஓ,5)



## ஊரடங்கு மீறல் 15,000 பேர் கைது

கொழும்பு,ஏப்.6
நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில், சுமார் 15 ஆயிரம் பேர் (14 ஆயிரத்து 966 பேர்) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்து 751 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் இன்று நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதிக்குள் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2

## 19 மாவட்டங்களுக்கு இனி 10 மணி நேரம் ஊரடங்கு தளர்வு!

கொழும்பு, ஏப். 6
யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய 6 மாவட்டங்களுக்கான பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்

2

## ஊரடங்கு தளர்வில் முதிரை மரக் கடத்தல்

கிளிநொச்சி, ஏப்.6
ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில், காட்டுக்குள்ளிருந்து சட்டவிரோதமாக மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் இன்று நண்பகல் உடையார்கட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

2

## 34 பேர் குணமடைவு !

யாழ்ப்பாணம்,ஏப்.6
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் ஒருவர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார். அதற்கமைய, இது வரை 34 பேர் கொரோனா வைரஸ் நோயிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இன்று முற்பகல் 10 மணியளவில் தேசிய தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்

2

## கம்போடியாவிலிருந்து வந்தவர் மந்திகையில் இன்று உயிரிழப்பு

### கொரோனா எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஏப். 6
மந்திகை மருத்துவமனையில் இன்று அதிகாலை உயிரிழந்தவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரது மாதிரிகள் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி கம்போடியாவிலிருந்து வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த 58 வயதுடைய நபருக்கு ஆஸ்துமா நோய் இருந்துள்

2

## பாதிப்பு 1,300,000 உயிரிழப்பு 70,500

வுகான், ஏப். 6
கொரோனா வைரஸால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 லட்சமாகவும், உயிரிழப்பு எண்ணிக்கை 70 ஆயிரத்து 500ஆகவும் அதிகரித்துள்ளது. சீனாவின் வுகான் மாகாணத்தில் டிசெம்பர் மாதம் இனங்

2

## மே நடுப்பகுதியில் பொதுத் தேர்தல்

### அரச தரப்புத் தகவல்

கொழும்பு, ஏப். 6
மே மாதம் நடுப்பகுதியில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம். பலமான அரசு தோற்றம் பெற்றால் மாத்திரமே அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்று ஆளும் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க

2

# கொரோனா தொற்றாளர்கள்...

தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களையும் எதிர்வரும் புத்தாண்டு வரையில் விடுவிக்கக் கூடாது. இவ்வாறு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏகாம்பரநாதன் தேவநேசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இன்று காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் தெரிவித்ததாவது:
கொரோனா தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் ஓரளவு ஏற்பட்டுள்ளது. மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்து வந்தோம்.
இதன்போதுதான் சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் தொடர்பான விவகாரமும் தொடங்கியது.
அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதும், உடனடியாகவே நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வேகமாக எடுத்தோம்.
அவருடன் பழகியவர்கள் நெருங்கிய தொடர்புடையவர்களை தனியாகவும், அவரது ஆராதனையில் பங்கேற்றோர் உள்ளிட்ட ஏனையோரை தனியாகவும் தனிமைப்படுத்தினோம். இந்தத் தொடர் சங்கிலியில் தொடர்புடைய எல்லோரையும் நூறு வீதம் சரியாக அடையாளப்படுத்தி தனிமைப்படுத்தி விட்டோம் என்று சொல்ல முடியாது.
ஓரளவு சரியானவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தினோம். ஆராதனையில் பங்கேற்றவர்கள் தொடர்பில் பதிவு செய்யுமாறு அலைபேசி இலக்கத்தை அறிவித்தபோதும் 40பேரே தாமாகத் தொடர்பு கொண்டு தகவல்களைப் பதிவு செய்தார்கள். ஏனையோரை நாம் வேறு வேறு மூலங்கள் ஊடாகத் தேடியே கண்டறிந்து தனிமைப்படுத்தினோம்.
இவ்வாறு தனிமைப்படுத்தியுள்ள 319 பேரையும் இப்போதைக்கு விடுவிப்பது பொருத்தமாக இருக்காது. அவர்கள் எல்லோருக்கும் கொரோனாச் சோதனை செய்யப்படவில்லை. இப்போது 50 பேருக்கே செய்யப்பட்டுள்ளது.
அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று முடிவு வந்தாலும், மூன்று தடவை சோதனை செய்ய வேண்டும். அதன் பின்னரே அவர்களை விடுவிக்க முடியும்.
எனவே இப்போதைக்கு ஊரடங்கை நீக்குவதும் பொருத்தமானது அல்ல. மேலும், எதிர்வரும் புத்தாண்டு வரையில் தனிமைப்படுத்தல் தொடரவேண்டும்- என்றார். (ஓ,5)

# மே நடுப்பகுதியில்..

தெரிவித்தார்.
"ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான இடைக்கால அரசுக்கு மக்களாணை கிடைக்கப்பெறவில்லை. ஜனாதிபதி மாத்திரமே, மக்களால் தெரிவு செய்யப்பட்டார். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொதுஜன பெரமுன , மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முடிந்தளவுக்கு நிறைவேற்றியுள்ளது. பல விடயங்களை செயற்படுத்த இடைக்கால அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாத காரணத்தால் பல தடைகள் ஏற்பட்டன. இவ்வாறான விடயங்களை கருத்திற் கொண்டு, ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதற்கான திகதியை குறித்தொதுக்கினார்.
கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏப்ரல் மாதம் இடம்பெறவிருந்த பொதுத்தேர்தல் திகதி குறிப்பிடாமல் பிற்போடப்பட்டுள்ளது. தற்போது நாடு பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பலமான அரசு தோற்றம் பெற்றால் மாத்திரமே நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல முடியும். தற்போதைய நிலைமை சீர் செய்யப்பட்டதன் பின்னர் மே மாதம் நடுப்பகுதியில் பொதுத்தேர்தலை பாதுகாப்பான முறையில் நடத்த எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஓ,5)

# 15,000 பேர் கைது

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் கடந்த மார்ச் 20 ஆம் திகதி மாலை 6 மணி முதல் நாட்டில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.
இதற்கமைய, இன்று காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரையான 6 மணித்தியால காலப்பகுதியினுள் மட்டும் ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் 171 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 86 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-22)

# 8பேருக்கு இன்று...

கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களிடம் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் நாவாந்துறையைச் சேர்ந்த 8 பேரின் மாதிரிகள் இன்று காலை சோதனைக்காகப் பெறப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏகாம்பரநாதன் தேவநேசன் தெரிவித்தார். (ஓ,5)

# 19 மாவட்டங்களுக்கு இனி 10 மணி நேரம்...

பிரிவு தெரிவித்துள்ளது. ஏனைய 19 மாவட்டங்களுக்கான ஊரடங்குச்சட்டம் ஏப்ரல் 9 ஆம் திகதி காலை 6 மணிக்கு தற்காலிகமாக தளர்த்தப்படும். அதன்பின்னர் மாலை 4 மணி முதல் மீண்டும் ஊரடங்கு நடைமுறைக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை 8 மணிநேரம் தளர்த்தப்பட்ட ஊரடங்கு இரு மணிநேரம் அதிகரிக்கப்பட்டு 10 மணிநேரமாக்கப்பட்டுள்ளது.
மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்கும் தரப்புக்கு அனுமதி வழங்கப்படும். அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள நடைமுறையை மீறுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
விவசாயம், ஏற்றுமதி பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு தமது வேலைகளை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இதேவேளை,களுத்துறை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் முற்றாக முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் அதே நடைமுறை தொடரும். அப்பகுதிகளுக்கு செல்வது முழுமையாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ஓ,5,44)

# 34 பேர் குணமடைவு !

பின்படி கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 176 ஆக காணப்படுகின்றது.
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்ட 176 பேரில் தற்போது 137 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதோடு, சீனப் பெண் உள்ளடங்கலாக இது வரை 34 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.
5 பேர் உயிரிழந்தனர்.
அத்துடன் மருத்துவமனைகளில் தற்போது 257 பேர் கொரோனாத் தொற்று தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது. (ஐ-22)

# ஊரடங்கு தளர்வில்...

விசுவமடு காட்டுப் பகுதியில் மரங்கள் தறிக்கப்பட்டு சட்டவிரோதமாகக் கடத்தப்படுகிறது என்று விசுவமடு இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்தது. அது தொடர்பில் இராணுவத்தினர் தருமபுரம் பொலிஸாருக்கு அறிவித்தனர்.
40 முதிரை மரக் குற்றிகளை டிப்பர் வாகனத்தில் ஏற்றி கொண்டுசெல்லவிருந்த போது டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார். டிப்பர் வாகனத்தோடு மரக்குற்றிகள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கம்போடியாவிலிருந்து வந்தவர்

ளது. கடந்த மூன்று தினங்களாக அவர் மூச்சு விடுவதற்குச் சிரமப்பட்டுள்ளார். நெல்லியடியிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அவர் இன்று அதிகாலை கொண்டு செல்லப்பட்டுள்ளார்.
மருத்துவமனை நிர்வாகத்தினர் அவரை மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்குமாறு பணித்துள்ளனர்.
மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில், அவரது மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரிசோதனை முடிவுகள் இன்று இரவு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ,5,26,159)

# பாதிப்பு 1,300,000...

காணப்பட்ட கொரோனா வைரஸ் உலகமெங்கும் தற்போது பெரும் கிலியை ஏற்படுத்தி வருகின்றது. அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள் கொரோனாவால் மிக அதிகமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி உலக அளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 லட்சமாக அதிகரித்தது. 70 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் நேற்று மட்டும் 1,165 பேரும், ஸ்பெய்னில் 694 பேரும், இத்தாலியில் 525 பேரும், பிரான்சில் 518 பேரும், பிரிட்டனில் 621 பேரும் உயிரிழந்தனர். (ம)

# கொரோனா விழிப்புணர்வு கீதம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

வடக்கு மாகாணத்தில் கொரோனா விழிப்புணர்வு கீதம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட இறுதியாண்டு மருத்துவ மாணவர்களின் எண்ணத்திலேயே இந்தக் கீதம் உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையின் சுகாதார மேம்பாட்டுப்பிரிவின் அனுசரணையுடன் “கொரோனாவை வெல்வோம்” என்ற பெயரில் இந்த விழிப்புணர்வுக்கீதம் வெளியிடப்பட்டுள்ளது.(க-7)

# 50 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

நாரந்தனை,ஏப்.6

பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/57 கிராம அலுவலர் பிரிவை உள்ளடக்கிய நாரந்தனை கிராமத்தைச் சேரந்த பெண்தலைமைத்துவம் உள்ளிட்ட 50 குடும்பங்களுக்கே இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

பயனாளிகளது குடும்பங்களுக்கு கிராமஅலுவலரது உதவியோடு வீடுவீடாகச் சென்று இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-20)





# தேர்தலை நடத்த அவசியமில்லை

## பெரேரா தெரிவிக்கின்றார்

கொழும்பு, ஏப். 6

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கோ அல்லது பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கோ எந்தத் தேவையும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுத்த பின்னர் தேர்தலை நடத்தி மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாகத் தீர்மானிக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெறுவதே உசிதமானது என்று கூறிய அவர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றின் வியாக்கியானத்தைக் கோருவார் என்றும் தெரிவித்தார். (த)



# கொரோனா ரோபோ கையளிப்பு

கொழும்பு,ஏப்.6

பொலநறுவை வெலிகந்தை வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கான, அன்றாட மருத்துவ நடவடிக்கைகளுக்கு வசதியாக தனியார் நிறுவனத்தால் (MAS) தயாரிக்கப்பட்ட ரோபோ இயந்திரம் நன்கொடையாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்த ரோபோ பயன்படுத்தப்படும் என்று பொலநறுவை பொது மருத்துவமனையின் இயக்குநர் வைத்தியர் சம்பத் இந்திக குமார தெரிவித்துள்ளார்.(க)



# 203 பேர் விடுவிப்பு

முல்லைத்தீவு,ஏப்.6

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் 203 பேர் இன்று காலை விமானப்படையினரின் உதவியுடன் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 21 ஆம் திகதி இந்தியாவுக்கு யாத்திரை சென்ற இவர்கள் விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். இவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் முல்லைத்தீவு கேப்பாபுலவு விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டனர்.

14 நாள்கள் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்த இவர்களில் எவருக்கும் தொற்று ஏற்படாத நிலையில், இவர்களுக்கான மருத்துவச் சான்றிதழை கேப்பாப்பிலவு விமானப்படைத்தளத்தின் கப்டன் விஜயசிறீவர்த்தன வழங்கினார்.

இவர்களில் 56 ஆண்களும், 147 பெண்களும் உள்ளிட்ட 203 பேரில் சிறுவர் ஒருவர் உள்ளிட்ட 5 பௌத்த மதகுருமாரும் அடங்குவர். தனிமைப்படுத்தல் காலத்தில் இவர்கள் வாழ்த்துக் கவிதைகளையும், சித்திரங்களையும் வரைந்து அவற்றை விமானப்படையினரிடம் ஒப்படைத்தனர். வீடுகளுக்குச் செல்லும் இவர்கள் இரண்டு வாரங்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலில் ஈடுபடவேண்டும் என்று விமானப்படையின் மருத்துவர்கள் அறிவுறுத்தினர். தொற்று நீக்கி மருந்து விசிறப்பட்டு, பொலிஸார் மற்றும் விமானப்படையினரின் பாதுகாப்புடன் 6 பஸ்களில் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.(க19)

# வதந்தி பரப்பினால் 7 ஆண்டுகள் சிறை

கொரோனா,ஏப்.6

கொரோனா வைரஸ் தொடர்பிலும், அதனைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் போலித் தகவல்களை பரப்புபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய அதேவேளை, சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டுவரும் போலித் தகவல்களையும் கட்டுப்படுத்த வேண்டிய நிலை பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது. பொறுப்புடன் செயற்படும் பதிவு செய்யப்பட்ட ஊடகங்களில் வெளியாகும் தகவல்களை நம்புவது போன்று, சமூக வலைத்தளங்களில் வரும் தகவல்களையும் மக்கள் நம்புகின்றனர். இதனால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. இலங்கை முடக்கப்படவுள்ளது எனப் போலி தகவல் பரப்பப்பட்டால், அதனால் மக்கள் குழப்பமடைந்து, உளரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாக்கக்கூடும். தனிப்பட்டவர்கள் இவ்வாறு போலித் தகவல்களைப் பரப்புகின்றனரா? திட்டமிட்ட அடிப்படையில் குழுவொன்று செயற்படுகின்றதா? எனக் கண்டறிய வேண்டும்.



அத்துடன், இதனவாதம் மற்றும் மதவாதத்தைத் தூண்டுபவர்களும் கைது செய்யப்படுவார்கள். எனவே, பொறுப்புடன் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சமூக வலைத்தளங்களில் போலித் தகவல்களைப் பரப்புபவர்களுக்கு எதிராக தொழில்நுட்ப குற்றத்தின் கீழ் 5 ஆண்டுகளும், குற்றவியல் சட்டத்தின் கீழ் 2 ஆண்டுகளும் சிறைதண்டனை விதிக்கப்படும்? என்றார்.(க-44)

# மருத்துவமனையில் பிரதமர் ஜோன்சன்!

## பீதியில் பிரிட்டன்



லண்டன், ஏப்ரல் 6
பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கொரோனா வைரஸால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த அவர் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால் பதற்றத்தில் உறைந்துள்ளது பிரிட்டன்.
சீனாவின் வுகான் மாகாணத்தில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகில் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது.
இந்த வைரஸைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் கொரோனாவால் தற்போது அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பிரிட்டனில் அரசியல் தலைமைகளுக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் கொரோனாவால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே நலம்பெற்றார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தார். தற்போது அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் அவரது உடல்நிலை தொடர்பில் பதற்றத்தில் உறைந்துள்ளது பிரிட்டன்.
(மரி1)

# புலிக்கும் கொரோனா

வொஷிங்டன், ஏப். 6
அமெரிக்காவில் புலி ஒன்றுக்கு கொரோனா வைரஸ் தாக்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அமெரிக்காவில் கொரோனா தாண்டவமாடி வருகின்றது. கொரோனா வைரஸ் மனிதர்களில் இருந்து மனிதர்களைத்தான் தாக்கும் என்ற கருதுகோள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அதைப் பொய்ப்பிக்கும் விதமாக புலிக்கு கொரோனா பரவியுள்ளது.
நியூயோர்க் நகர உயிரியல் பூங்காவிலேயே புலிக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து அந்தப் புலி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. மனிதர்களில் இருந்து விலங்குகளுக்குக் கொரோனா பரவும் என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளதால் உலக நாடுகளிடத்தில் மேலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
(ம)



# 'பிட்கோவக்'

வுகான், ஏப். 6
கொரோனா வைரஸுக்கு அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடுப்பூசியின் பெயர் பிட்கோவக்.
இந்தத் தடுப்பூரி எலிகளுக்குச் செலுத்தப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் தடுப்பூசிக்கு பிட்கோவக் என்று பெயரிடப்பட்டுள்ளது. இன்னும் மூன்று சுற்று ஆய்வின் பின்னரே குறித்த தடுப்பூசி பயன்பாட்டுக்கு வரும்.
(ம)

# இரண்டரை நிமிடங்களுக்கு ஒருவர் உயிரிழக்கும் துயர்

## நியூயோர்க்கின் நிலை இது



வொஷிங்டன், ஏப். 6
கொரோனா வைரஸ் காரணமாக அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் இரண்டரை நிமிடங்களுக்கு ஒருவர் உயிரிழக்கின்றார் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
அமெரிக்காவில் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்தான் இந்தப் பாதிப்பு அதிகமாக உள்ளது. அங்கு சுமார் 1 லட்சத்து 75 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் நியூயோர்க் நகரம் குறித்து பெரும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அங்கு ஒவ்வொரு இரண்டரை நிமிடங்களுக்கும் ஒருவர் உயிரிழக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ம)

# விடுபடுகின்றது இத்தாலி



உரோம், ஏப். 6
கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்த இத்தாலி, தற்போது அதன் பிடியில் இருந்து மெல்ல மெல்ல விடுபட ஆரம்பித்துள்ளது.
இதுகுறித்து இத்தாலியின் தேசிய சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் சில்வியோ புராசாபேரோ நிருபர்களிடம் தெரிவித்ததாவது: 'இத்தாலியில் கடந்த சில நாட்களாக உயிரிழப்புகள் குறைந்து வருவது கொரோனா வைரஸின் தாக்கத்தை குறிக்கும் வளைவு கோடு சாயத்தொடங்குவதைக் குறிக்கிறது. தொடர்ந்து இதுபோல் இறப்புகள் வரும் நாட்களில் குறைந்து வந்தால், ஊரடங்கை தளர்த்தும் அடுக்கட்ட நடவடிக்கையை பற்றி சிந்திக்கத் தொடங்குவோம்' எனத் தெரிவித்தார்.
(ம)

# மெத்தனத்தால் வந்த பாதிப்புத்தான் இது! ட்ரம்புக்கு எதிராக எதிர்க்கட்சி வசைமழை



வொஷிங்டன், ஏப். 6
ட்ரம்ப் அரசின் மெத்தனத்தால்தான் அமெரிக்காவுக்கு இந்தப் பேரழிவு ஏற்பட்டுள்ளது என்று அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.
கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அந்த நாட்டில் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்தப் பெரும் அழிவுக்கு ட்ரம்ப் அரசே காரணம் என்றுள்ளன எதிர்க்கட்சிகள்.
சீனாவில் கொரோனா பரவுகின்றது. அது மனிதர்களில் இருந்து மனிதர்களுக்குப் பரவும் என்று டிசெம்பர் 31ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்தது சீனா. இந்த அறிவிப்பு வெளிவந்த அடுத்த 15 நாள்களுக்குள் சீனாவில் இருந்து 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் அமெரிக்காவுக்குள் நுழைந்துள்ளனர். இவர்கள் அமெரிக்க விமான நிலையங்களில் எவ்விதச் சோதனைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை. இதுதான் அமெரிக்காவில் கொரோனாவால் பேரழிவு ஏற்படக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.
(ம)

# ரோகித் சர்மா, வோர்ணர் அளவுக்கு அதிரடிகாட்டுவதற்கு எவரும் இல்லை

## மூடி சொல்கின்றார்



லண்டன், ஏப். 6
ரி20 கிரிக்கெட்டின் சிறந்த தொடக்க வீரர்கள் என்றால் அது ரோகித் சர்மாவும், டேவிட் வோர்ணரும்தான். அவர்கள் அளவுக்கு எவராலும் அதிரடிகாட்ட முடியாது - என்று தெரிவித்துள்ளார் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் மூடி.
கீச்சகத்தில் ரசிகர் ஒருவரின் வினாவுக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்த தாவது:
ரி20 கிரிக்கெட்டின் சிறந்த தொடக்க வீரர்கள் என்றால் எவரைக் குறிப்பிடு வதென்று சட்டென நினைவுக்கு வரவில்லை. அனைத்து வீரர்களும் சிறந்தவர்கள். கோலி, அசாம், குயின்டன் என்று இந்தப் பட்டியல் நீளும். ஆனால் ரோகித், வோர்ணர் அளவுக்கு எவராலும் அதிரடிகாட்ட முடியாது - என்றார். (ம)

# ஐ.பி.எல் நடக்கும்

## பீட்டர்சன் நம்பிக்கை

புதுடெல்லி, ஏப். 6
ஐ.பி.எல் தொடர் நிச்சயம் நடக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது - என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய பிரபல வர்ணனையாளருமான கெவின் பீட்டர்சன்.
ஐ.பி.எல் தொடர்பில் பீட்டர்சன் மேலும் தெரிவித்ததாவது:
ஜூலை-ஓகஸ்டில் கிரிக்கெட் போட்டிகள் தொடங்கலாம். ஐ.பி.எல் கட்டாயம் நடைபெறும் என உறுதியாக நம்புகிறேன். ஐ.பி.எல் தொடருடன் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்கப்படலாம். ஐ.பி.எல் அணிகள் மிகப் பெரிய பொருளாதார சிக்கலை சந்திக்க நேரிடும். இதை சற்று சமாளிக்கும் வகையில் ரசிகர்கள் யாரையும் அனுமதிக்காமல் பூட்டிய மைதானத்திற்குள் மூன்று அல்லது நான்கு வாரங்களில் போட்டிகளை நடத்திட முடியும்" என்றார். (ம)



# தள்ளிப்போன திருமணங்கள்

சிட்னி, ஏப். 6
கொரோனா வைரஸ் கிரிக்கெட் போட்டிகளை மட்டும் நிறுத்தவில்லை. ஆஸ்திரேலிய வீரர்களின் திருமணங்களையும் நிறுத்திவைத்துள்ளது.
ஆஸ்திரேலிய வீரர்களான ஆடம் ஷம்பா, ஜெஸ் ஜோன்சன், ஜேக்சன் பேர்ட், மிட்செல் ஸ்வெப்சன், டை, ஆர்கி ஷொர்ட், கேட்லின் பிரையெட், மெக்டேர்மோட் ஆகியோரின் திருமணங்களே அவ்வாறு பிற்போடப்பட்டுள்ளன. (ம)

## இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு

# 8,500 கோடி நிதி இழப்பு!!

லண்டன், ஏப்ரல் 6
கொரோனா வைரஸ் காரணமாக ஆட்டங்களை நடத்தமுடியாமல் போயுள்ளதால் இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு இலங்கை ரூபா மதிப்பில் சுமார் 8 ஆயிரத்து 500 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.
கொரோனா வைரஸ் தொற்று ஒட்டு மொத்த உலகையும் ஆட்டிப்படைத்து வருகிறது. இதன் தாக்குதலில் இருந்து விளையாட்டு உலகமும் தப்பவில்லை. இரண்டு மாதங்களுக்கு எந்த சர்வதேச போட்டிகளும் இல்லை என்ற நிலைமை உருவாகிவிட்டது. இங்கிலாந்திலும் கொரோனா பாதிப்பு கணிசமாக உள்ளது.
இங்கிலாந்தில் பிரபலமான கவுன்ட்டி கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதியன்று தொடங்கும் என்று திட்டமிடப்பட்டு இருந்தது. தற்போது தொடர் மே 28ஆம் திகதி வரை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இதனால் 7 சுற்றுகளை இழக்க வேண்டி உள்ளது. தற்போதைய நிலைமையைப் பார்த்தால் இந்த ஆண்டுக்கான கவுன்ட்டி போட்டி கைவிடப்படவே அதிக வாய்ப்புக்கள் உள்ளன.
அதுமட்டுமல்லாமல் இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் இருந்த விளம்பரங்களும் தற்போது கைநழுவி விட்டன. இதனால் அந்தக் கிரிக்கெட் சபைக்கு 8,500 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. (ம)



# தினமும் 10 ஆயிரம் பேரின் பசியாற்றுகின்றார் கங்குலி

புதுடெல்லி, ஏப். 6
இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரான சவுரவ் கங்குலி, தனது சொந்த நிதியில் இருந்து தினமும் 10 ஆயிரம் பேரின் பசியாற்றி வருகின்றார்.
கொல்கத்தாவைச் சேர்ந்த இஸ்கான் என்ற அமைப்பின் ஊடாகவே கங்குலி இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றார்.
முன்னதாக மேற்கு வங்க மாநில அரசுக்கு கங்குலி 20 ஆயிரம் கிலோ அரிசி மூடைகளை வழங்கியிருந்தார். ஆதரவற்றவர்கள் மற்றும் ஊரடங்கால் பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளவர்களுக்கு பசியாற்ற இந்த அரிசியைப் பயன்படுத்துமாறு அவர் கோரியிருந்தார். (ம)

# 5,000 குடும்பங்களுக்கு ஹர்பஜனால் உதவி!

புதுடெல்லி, ஏப். 7
கொரோனா ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 5,000 குடும்பங்களுக்கு உணவு உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றார் ஹர்பஜன்சிங்.
வறுமைக்குட்பட்ட பகுதியான ஜலந்தர் மாவட்டத்தில்தான் ஹர்பஜன்சிங் உதவித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றார்.
இது தொடர்பில் ஹர்பஜன்சிங் தெரிவித்ததாவது:
'எனது உணவு வழங்கும் பணி தொடரும். வீடு இல்லாதவர்கள், வேலை இல்லாதவர்கள் ஆகியோருக்கு இயல்பு நிலை திரும்பும் வரை உணவு வழங்கப்படும்' என்றார். (ம)



# இலங்கையர் நால்வருக்கு இந்தியாவில் கொரோனா

டில்லி,ஏப்.6

இந்தியாவில் மத நிகழ்வில் பங்குபற்றியதால், இலங்கையர்கள் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் நால்வரும், டில்லி - நிசாமுடினில் தப்லிக் ஜமாத் மார்கஸ் நிகழ்வில் பங்குபற்றியுள்ளனர்.

அந்த நிகழ்வில் பங்கேற்ற இந்தியர்கள் பலருக்கு கொரோனா தொற்று இருப்பது முன்னதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. (க)

# கப்பலில் மீட்கப்பட்டவர் கொழும்பு துறைமுகத்தில்

## பூஸாவுக்கு அனுப்ப ஏற்பாடு

கொழும்பு,ஏப்.6

எம்.எஸ்.சி. மெக்னிஃபிகா என்ற கப்பலில் இருந்து மீட்கப்பட்ட இலங்கைப் பணியாளர், கொழும்புத் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ள நபர் பூஸா கொரோனா தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப் படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து இத்தாலி நோக்கிப் பயணித்த சொகுசுப் பயணிகள் கப்பலில் சமையல் கலைஞராகப் பணிபுரிந்த அநுர ஹேரத் என்ற சமையல் கலைஞர் தம்மை இலங்கையில் தரையிறங்க அனுமதிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் காணொலி மூலம் கோரிக்கை விடுத்தார்.

அதனையடுத்து குறித்த இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில், இலங்கைக் கடற்படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)





# கொரோனா நீங்க சிறப்பு யாகம்

மன்னார்,ஏப்.6

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்கள் விடுபட்டு, நிம்மதியும் அமைதியுமான வாழ்க்கை வாழ வேண்டி மன்னாரில் சிறப்பு யாகம் நடத்தப்பட்டது.

நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று காலை 8 மணியிலிருந்து காலை 10 மணி வரை சிறப்பு யாகம் நடத்தப்பட்டது. ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் ஆலயத்தின் சிவாச்சாரியார் கதிரேசன் குருக்களால் யாகம் நடத்தப்பட்டது. (க-213)

# 100 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

கொடிகாமம்,ஏப்.6

செரண்டிப் சிறுவர் இல்லத்தால் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புன்னைநீராவி, கல்லாறு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட, அன்றாடக் கூலி வேலைக்கு செல்வோர் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஆகிய தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)






# வாகனம் சாய்ந்து இருவர் காயம்

ஹற்றன்,ஏப்.6

கெப்ரக வாகனம் பிரதான வீதியில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் காயமடைந்தனர். ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தபளை பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி மரக்கறி வகைகளை ஏற்றிச் சென்ற கெப்ரக வாகனமே மண்மேட்டில் மோதுண்டு இவ்வாறு விபத்துக்குள்ளானது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொலிஸாராலும் உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, ஏப்.6

நாளாந்த உணக்காக அவதியுறும் குடும்பங்களில் ஒரு தொகுதியினருக்கு முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன .

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களை இனம் கண்டு அவர்களுக்குத் தேவையான உணவுப் பொதிகளே இவ்வாறு வழங்கப் பட்டுள்ளன. புதுக்குடியிருப்பின் கிராமப் புறங்களில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வயோதிபர்கள், சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களின் உணவுத் தேவை இதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-19)

# கசிப்பு உற்பத்தி கட்டுவனில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.6

கசிப்புக் காய்ச்சுவதற்கான உபகரணங்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கட்டுவனைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் கட்டுவன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருப்பதாக காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களின் வீட்டை நேற்று நண்பகல் முற்றுகையிட்ட காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் அங்கிருந்து 3 பரல்களில் அடைக்கப்பட்ட 3000 லீற்றர் கோடா, காஸ் சிலிண்டர், காஸ் அடுப்பு, மற்றும் உற்பத்திப் பொருள்கள் என்பன வற்றை மீட்டனர். குறித்த பொருள்களை வைத்திருந்த குற்றச் சாட்டில் அங்கிருந்த இருவர் கைது செய்யப் பட்டனர் என்று விசேட குற்றத்தப்பு பிரிவினர் தெரிவித்தனர். (ப-26)



## நிர்க்கதியானவர்கள் சொந்த இடங்களுக்கு!

கொழும்பு, ஏப். 6

ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து மேல் மாகாணத்தின் முக்கிய நகரங்களில் பல்வேறு தொழிற்துறைகளுக்காக தற்காலிகத் தங்குமிடங்களில் தங்கியுள்ளவர்களை மீண்டும் அவர்களின் வீடுகளுக்கு அனுப்புவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இது குறித்து மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணத்திலக தெரிவித்துள்ளார்.

மீண்டும் வீடுகளுக்கு செல்வதற்கு வசதிகள் இன்மையால் இவர்கள் பெரும், அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதற்கமைய, உரிய நடைமுறையூடாக இவர்கள் விரைவில் அவர்களது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அது குறித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ,5,22)

# பொருளாதாரப் பாதிப்புக்கு அரசு இடமளிக்கக் கூடாது

### ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை



கொழும்பு, ஏப். 6

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள், பொருளாதார ரீதியில் பாதிப்புக்களை எதிர்கொள்வதற்கு இடமளிக்கக் கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வங்கித்துறையைப் பாதுகாப்பது முக்கியம். வங்கி நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்படக்கூடாது. தனியார் துறை ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் ஏனைய நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றது. எனவே, அரசு இது குறித்து கவனம் செலுத்த வேண்டும். கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்ய இடைக்காலக் கணக்கறிக்கை போதுமானதாக அமையாது. காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)



## 25 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு,ஏப்.6

முல்லைத்தீவு முத்தையன் கட்டு இடது கரை கிராமத்தில் உள்ள , 'வானவில் ஊற்று ' மாலை நேரக் கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் சிறுவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தால் இந்த உதவிகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை வழங்கப்பட்டன.

கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் சிறுவர்களின் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கே தலா ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

# 93%

## சமுர்த்திக் கொடுப்பனவு யாழில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணத்தில் சமுர்த்தி உதவி பெறும் 76 ஆயிரம் குடும்பங்களில் 93 சதவீதமான குடும்பங்களுக்கு அந்தக் கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா சமுர்த்திக் கடனாக வழங்கப்படுகின்றது. அவர்களது சேமிப்பை பிணையாக வைத்து இந்தக் கடன் தொகை வழங்கப்படுகின்றது. சமுர்த்திக் கொடுப்பனவுகள், கடன்கள் யாவும் சமுர்த்தி வங்கிகளில் வைத்தே முன்னெடுக்கப்பட்டு வருவது வழமை. தற்போதுள்ள தொடர் ஊரடங்கு காரணமாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தமது தற்துணிவின் அடிப்படையில் பணத்தை சமுர்த்திப் பயனாளிகளின் வீடுகளுக்கு சென்று வழங்கி வருகின்றனர். இதுவரை 93 சதவீதமானோருக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அன்றாடத் தொழிலில் ஈடுபடுவோர் ஊரடங்கு காரணமாக வருமானம் இன்றித் தவிக்கும் நிலையில் அவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு பேருதவியாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமுர்த்திப் பணியாளர்களும் அர்ப்பணிப்போடு செயலாற்றி, குறுகிய காலத்தில் இந்தக் கடன்தொகையை மக்களுக்கு முடிந்தளவு விரைவாக வழங்கி வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

සමෘද්ධි සහන සේවාව
சமுர்த்தி நிவாரண சேவை
Samurdhi Relief Service

## அரசியல் கைதிகளை இனியாவது விடுவிக்குக

### கோத்தாவுக்கு செல்வம் அவசர கடிதம்

மன்னார், ஏப்.6

நாட்டில் ஏற்பட்ட போரின் போது 'ஷெல்' துகள்களை உடலில் சுமந்தவாறு தற்போது பல அரசியல் கைதிகள் எவ்வித மருத்துவ வசதிகளும் இன்றி சிறைச்சாலைகளில் தவித்து வருகின்றனர். அவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஏனைய கைதிகள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது போல் அவர்களையும் விடுதலை செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு அவசர கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (ப-56)



## உலர் உணவு பொதி வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 6

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான் மனோன்மணி அம்மன் அன்னதான சபையின் நிறுவுனர் ந.கிருஸ்ண பிள்ளையால், புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தில் 115 குடும்பங்க ளுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஒ,5)





ஊரடங்கால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாளாந்தம் கூலி வேலை செய்யும் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. கண்ணகி விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில், ஏழாலையூர் நண்பர்களின் அனுசரணையில் இந்த உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ)





## நயினை அம்மன் ஆலய பங்குனி உத்தர உற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சூழ நடைபெறும் பங்குனி உத்தர உற்சவம் மிகச் சில பக்தர்களுடன் அமைதியாக இன்று இடம்பெற்றது.

ஆலயத்தில் நடைபெறும் பங்குனி உத்தர உற்சவத்தில் வழக்கமாக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வதோடு ,வீதியுலாவும் நடைபெறும். ஆனால், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையை அடுத்து, நிர்வாக சபையின் பங்குபற்றுதலோடு மட்டும், பங்குனி உத்தர உற்சவத்தின் வீதி உலா இன்று நடைபெற்றது. (க-7)

## 75 குடும்பங்களுக்கு பூநகரியில் நிவாரணம்

கிளிநொச்சி, ஏப்.6

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இரணைமாதா நகர் கிராமத்தில் வசிக்கும் பொருளாதார வறுமை மிக்க 75 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வேண்டுகோளுக்கு இணங்க சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் மக்களின் நிதி உதவியில் மேற்படி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# 1000 பேர் சுய தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஏப். 6

வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த சுமார் ஆயிரம் பேர் தொடர்ந்தும் தமது கண்காணிப்பின் கீழ் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையங்களிலிருந்து வெளியேறியதன் பின்னர், வீடு திரும்பியவர்களே இவ்வாறு சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையங்களிலிருந்து வெளியேறிய ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதால், தங்களின் வீடுகளுக்குள்ளேயே சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய, தனிமைப்படுத்தும் நிலையங்களிலிருந்து அனுப்பி வைக்கப்படுவோர் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுவது கட்டாயமானதாகும் எனவும் உபுல் ரோஹன சுட்டிக்காட்டியுள்ளார்.

வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுவோரின் குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கத் தயாராக உள்ளதாகவும் இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஏதேனும் சிக்கல் நிலை ஏற்படும் பட்சத்தில், உடனடியாக தங்களின் பிராந்தியத்துக்குப் பொறுப்பான அதிகாரிக்கு அறிவிக்குமாறு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன மேலும் தெரிவித்துள்ளார். (ஒ,5,22)

# கொரோனா நோயாளர்களுக்கு மருத்துவ மெத்தை கண்டுபிடிப்பு

## இலங்கை மாணவி சாதனை

கொழும்பு,ஏப்.6

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படும் நோயாளர்களுக்கு இலகுவாக சிகிச்சை வழங்கவென இலங்கையைச் சேர்ந்த மாணவியால் மெத்தை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை நாகொட தேசிய சுகாதார அறிவியல் நிறுவனத்தில் முதலாம் ஆண்டு தாதிய மாணவியே இந்த மருத்துவ மெத்தையைத் தயாரித்துள்ளார். கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் போது ஒரே நாளில் பல நோயாளிகளை அடுத்த பக்கம் திருப்ப வேண்டும். எனினும் அது ஆபத்தான நடவடிக்கை என்பதனால் தூரத்தில் இருந்து ரிமோட் ஊடாக நோயாளிகளைக் கையாளும் மெத்தை ஒன்றையே குறித்த மாணவி தயாரித்துள்ளார்.

அண்மையில் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக தொடர்ந்து, கை கழுவுவதற்காக ரிமோட் ஊடாக பாதுகாப்பாகத் தண்ணீர் வழங்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த செயல்முறையை உருவாக்கிய மத்துகம கீதா நந்த உதயசிறியின் மகளான சந்தலி நிப்மா என்ற மாணவியே, தனது தந்தை மற்றும் சித்தப்பாவின் உதவியுடன் இந்த மெத்தையைத் தயாரித்துள்ளார். தூரத்தில் இருந்து கட்டுப்படுத்தும் ரிமோட் ஊடாக நோயாளியை பக்கம் திருப்புதல், நேராக நிமிர்த்துதல் உட்பட பல செயல்முறைகளை இந்த மெத்தையின் மூலம் மேற்கொள்ள முடியும்.

தூரத்தில் இருந்து கட்டுப்படுத்தும் ரிமோட் ஊடாக இயங்கும் மெத்தை ஒன்று இதுவரையில் தயாரிக்கப்படவில்லை. இந்த தயாரிப்புக்குத் தேவையான உதவிகளை வழங்கினால் சர்வதேச மட்டத்திலும் இதனைத் தயாரிக்க முடியும் என்று குறித்த மாணவி தெரிவித்தார். (ஐ)



# இன்னும் இரு பகுதிகள் நேற்றிரவு முடக்கம்!

கொழும்பு, ஏப்.6

ஜாஎல சுதுவெல்ல மற்றும் பாரிஸ் பெரேரா மாவத்தை ஆகிய பகுதிகள் நேற்று இரவு முதல் முடக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமையவே ஜாஎல சுதுவெல்ல மற்றும் பாரிஸ் பெரேரா மாவத்தை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 25 வயதான இளைஞர் ஒருவருக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று இரவு உறுதிசெய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்தே நேற்று இரவு முதல் குறித்த பகுதிகளை முடக்கும் நடவடிக்கை பிரதேச பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் ஜாஎல பொலிஸார் இணைந்து மேற்கொண்டனர். (ப)

# ‘ஸ்மார்ட் போன்’ பாவனை வீடுகளில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 6

ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியில், இலங்கையில் வீடுகளிலிருந்து ‘ஸ்மார்ட் போனை’ பயன்படுத்தும் வீதம் சடுதியாக அதிகரித்துள்ளது என்று கூகிள் நிறுவனத்தின் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

வீடுகளிலிருந்து ‘ஸ்மார்ட்போன்’களைப் பயன்படுத்துவது 32 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென்று



கூகிள் அறிவித்துள்ளது. இந்த நிறுவனம் ‘லொக்கேசன் டேட்டா’ என்றழைக்கப்படும் பயலுநர்கள் இருக்கும் இடங்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்திருந்தது. ‘கொவிட்19’ தொற்றை அடுத்து, பல்வேறு நாடுகள் சமூக இடைவெளியைப் பேண முனைகின்றன. இந்த முயற்சிகளுக்கு உதவி செய்வதே கூகிள் நிறுவனத்தின் நோக்கம்.

இதன் பிரகாரம், சில்லறை விற்பனை நிலையங்கள், பூங்காக்கள், மருந்தகங்கள், பொதுப் போக்குவரத்து தரிப்பிடங்கள் போன்றனவற்றில் ‘ஸ்மார்ட் போன்’ பயன்பாடு 50 சதவீதத்துக்கு மேலாகக் குறைந்துள்ளதென்று கூகிள் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 06.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.